சி.சி எண்.136/2022     நாள்: 06.05.2024

அ.சா. 2 அபிநயா

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும்  அழைக்கப்பட்டு  சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் சம்பவத்தின் போது திருவாடனை அரசு கலைக்கல்லூரியில் படித்து வந்தேன்.  எங்களுக்கும் எதிரிக்கும் இடையே இடப் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.  நாங்கள் அதற்காக ஊரில் உள்ள முக்கியஸ்தர்களை வைத்து பேசினோம் என்றால் சரிதான்.  நாங்கள் கல்லுக் கல் ஊன்ற சம்பவம் நடந்த தேதியன்று தயார் ஆனோம் என்றால் சரிதான்.  அன்றைய தினம் எனது அப்பா வேலை விசயமாக திருவாடனை சென்றுவிட்டார்.

2. நானும், எனது அம்மா மற்றும் சகோதரி அகல்யா மற்றும் தாத்தா சின்னத்தம்பி ஆகியோர்இருந்தோம்.  எங்கள்வீட்டை சுற்றி 10 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கல்லுக் கல் ஊன்றும்போது எதிரி ஊன்றக்கூடாது என நிறுத்துவதற்காக வந்தார் என்றும், அப்போது எங்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். என் மீதும், என் அம்மா மீதும் தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்தார் என்றால் அதுப்பற்றி தெரியாது, நாங்கள் தான் புகார் கொடுத்தோம்.

3. அதனால் தான் மருத்துவமனையில் இருந்து மருத்துவரிடம் சொல்லாமல் மருத்துவமனையிலிருந்து வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எங்கள் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் இடையே இடது பக்கம்.  நாங்கள் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்ல எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான், எனது அப்பா எங்களை மருத்துவமனைக்கு போன் செய்ததால் வந்து அழைத்து சென்றார்.

4. எனது அப்பா வரும்வரை நாங்கள் வீட்டில் தான் இருந்தோம்.  நாங்கள் எனது அப்பா வந்த பின்னர் பேசிவிட்டு புகார் கொடுக்கசென்றோம் என்றால் சரியல்ல.  நானும், எனது அம்மாவும் எதிரியை எடுத்து இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கம் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல.  போலீசார் என்னை மருத்துவமனையில் வந்து மூன்று முறை விசாரீத்தார்கள்.  நாங்கள் சொன்னதை எழுதி வாங்கிக்கொண்டார்கள். நான் கையெழுத்து போட்டு போலீசாரிடம் கொடுத்தேன்.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.